


அகலிகா–அவளுக்கென்றோர் மனம்













Pax Ravichandra

+94763223960

pax.ravichandra@gmail.com

30.07-2024

அகலிகா -அவளுக்கென்றோர் மனம்






மானாட, தோகை மயிலாட, வண்ண மலர்கள் பூத்தாடும்
தோப்பில் மாங்குயில்கள் பாட, பொய்கையில் பூத்தாடும்
அல்லியும், செந்தாமரையும் நீராடும் பேரழகி
மலரோ இல்லை நிலவோ என வியந்தாட -அகலிகா

பங்கய முகத்தில், முறுவலோ முல்லை,
கண் குவளை, பற்களோ முல்லை, பவளமோ மேனி
மூக்கு செண்பகம், செவ்வாய் குமுதம்
ஐம்பூ விளையும் அமிர்தநிலமாய் மங்கை



நூலிடையும், செங்கலச மார்பும், பிறை நுதலும், பூஞ்செவிகளும்,
அழகிற்கு அழகூட்ட, பூங்கொடி மேனியில் பரிமளம் நறுமணமாக,
பார்க்க மயக்கும், பசுந்தேறல், கோதாண்ட தீட்சா குருபீடம்
கண்டவர் மயங்கும் குறையில்லாப் பேரழகோ நிறைகுடம்

மல்லிகையோ மங்கை மேனி வாசம்
முல்லையோ இதழ் சிந்தும் புன்னகையில் வாசம்
மதுமலர்க்குழலில் தோகையின் வாசம், பூத்த
பெண்மையில் அழகின் வற்றாத வாசம்



பூப்படைந்த கன்னி மனதில் பூத்த
காதல் வாசம், காப்பவிழ்ந்த தாமரையைக் கண்ட
ஆண் மனங்களில், வண்டும், தேனீயுமாய் தேனருந்தி
விடாய் தணிக்க காதற் காமத்தின் தோஷம்

பிரம்மன் சந்தனத்தில் செதுக்கிய திருமகளின் சிற்பம்,
அரம்பையர் கண்டு காதல் கொள்ள கன்னியோ
“***மோகினியின்***” அழகை விஞ்சிய பிம்பம், நிலவும்,
மலரும் உலாவிடும் பேரழகின் உயிரோவியம்



நீராடி விளையாடி ஆடை நனைந்து அழகு ஒளிர, ஈர
ஆடைக்குள் இரவில் மலரும் நிலவாய் அழகு,
வீரபுருஷனாய் வெள்ளை யானையில் வலம்வரும் -தேவர்
தலைவன் இந்திரன் விழிகளுக்கு தெவிட்டாத அமுது

கட்டழகனை கண்ட நெஞ்சில் நாண வேதம்
கட்டழகைக் கண்ட மனதில் காமவேதம்
முனிவன் முக்தல் மகளை முறையாய் மணப்பதே
இரு மனங்கள் பாடிய இன்ப நாதம்

சுயம்வரம்



பருவத்தில் பூத்த வசந்தம்-நெஞ்சத்திலே நிலைத்த
இந்திரன் பார்வையின் மாறாத சுகந்தம்
உருவத்தில் பெண்ணோ பேரழகுப் பெண் ஓவியம்
பார்த்த உள்ளங்களில் காதலின் கவிநயம்



கன்னியையும் கனியாக்கி கன்னிகா தானம்
செய்யத், தந்தை முக்தல் விடுத்த அழைப்பு
தேவரும், மன்னரும், தவசிகளும் என திரண்ட
கூட்டமோ, பேரழகைக் கண்டு ஏக்கத்தில் நிலைப்பு

மனம் கவர்ந்த மணாளளை மாலையிட்டு வரிக்க
சுயம் வரத்தை சூதாட்டமாய் மாற்றிய தந்தை
உலகைச் சுற்றி வரும் முதல் நபருக்கே என் மகள்
உறுதியாய் விதித்த நிபந்தனை

பூவே பூச்சூடிய அழகாய் மங்கை-பூத்துக் குலுங்கும் எழில்
பார்த்தவர் மனதை மயக்க, நெஞ்சில் ஏக்கம் நிலைக்க.,
கொங்கை முகையாக, மென்மருங்குல் கொம்பாக, அங்கை
மலராக, அடி தளிராக அழகிலும் பேரழகாய் அகல்யா



வெள்ளை வேழம் ஏறிப் பூமியை வலம் வர
பூபதி இந்திரன் பயணம், வெள்ளைப் பசுவை
வலம் வந்து, உலகைச் சுற்றி வந்தேன் முனி
கௌதமனின் பார்பனிய வாதம்




தேவரும், மன்னரும், தவசிகளும்
பேரழகிற்கு மாலையிடத் தவிக்க, தேவேந்திரனை
மனதில் வரித்த கன்னி, முனி கௌதமனோ கணவன்,
விதியை மதியால் வென்ற பார்பனியச் சதி

மண் பார்த்து நாணிச் சிவந்த பொன்மேனி
இந்திரன் கண்பட்டு கன்றிக் களிக்க, செம்புலப்பெயர்
நீர்போல் அன்புடை நெஞ்சம்தான் கலந்திடப்
பிறந்த காதல், கானல் நீரானதே, கன்னி மனம் வேகுதே

சடங்கு சம்பிரதாயமின்றி இந்திரனை
மணாளனாய் மனதில் வரித்த நிகழ்வு பூவிலங்கு
சதியால் விதியை வென்று சடங்கு-சம்பிரதாயமாய்
முடித்த உறவோ கன்னிக்கு இரும்பு விலங்கு

மங்கை என் பேரழகில் மயங்கி, சுயம் வரத்தில்
மாது எனக்காய் போட்டியிட்ட இந்திரன்
தந்திரத்தால் போட்டியில் வென்ற தபசி-கானக்குயிலை
கூட்டிலடைத்து பாடச் சொன்ன பார்ப்பனப் பரதேசி



வானம் பாடியாய் மாளிகையில் வாழக்கண்ட வண்ணக்
கனவு கலைந்திட, ஏழையாய் ஓலைக் குடிலுக்குள்
முடங்கிய வாழ்வு, நெஞ்சிலே கௌதமன் புரிந்த
வஞ்சத்தை நினைத்துப் புலம்பம் அங்கலாய்ப்பு

சாதியக் கறைபடிந்த வேதியன் மனம்,
வென்றான் கௌதமன் என வீறாப்பாய் விளம்பி,
கன்னிகாதானம் செய்து, காதலர் மனத்தை முறித்து
சாதியத்தை நிலை நிறுத்திய கறுப்புத் தினம்



திங்கள் முகம் தேய, செவ்வாய் குளற
மைவாள் நெடுங்கண்களில் நீரரும்ப,
கைவளை நடுங்க, கார் குழல் மலர்கள் உதிர,
உள்ளம் படபடக்க தவித்த மங்கை



உலகை சுற்றி வரும் வீரபுருஷனுக்கே என் மகள்
உலகறிய கூறிய வார்த்தை, சுற்றும் பூமியே உலகு
என அறிந்த தந்தை, சூழ்ச்சியாய், சாதியம் நிலைக்க,
கௌதமன் வென்றான் பறை சாற்றிய விந்தை

பசுவே உலகு என்ற பார்ப்பனிய வரண்ட வேதம்
தேவர்களும், மன்னர்களும் ஏற்காத விதண்டா வாதம்,
கோமாதா எங்கள் குலமாதா
பார்ப்பனர் தபோவனத்தில் தினம் ஓதும் கீதம்

கன்னி மனம் நொருங்க, மனம் வரைந்த காதல் ஓவியம்
வண்ணமிழந்து வெளிற, வரட்டு வேதம் வகுத்த ஞானம்
பெண் மனதை எரிக்க, மலிவாய் விலைபோன பேதை
மனமெங்கும் பெண்ணியப் புரட்சியின் கீதை

மாலையிட்ட முனியால் கன்னி மனதிலே பூகம்பம்
மனம் விரும்பியவனோ உலகைச் சுற்றி வந்த அவலம்
பசுவும், உலகும் ஒன்றே விதண்டாவதம்?
பார்ப்பன நீதியோ சதியான உபாயம்

பூமியைச் சுற்றி வந்த இந்திர பூபதிக்கோ ஏமாற்றம்
வரட்டுச் சொல்லாடலால் தோற்ற மனதில் வெஞ்சினம்
கன்னியோட சேரக் கண்ட காதல் கனவோ கானல் நீர்
பேரழகுப் பெருநிதியோ முனிக்கு சங்கநிதி, மஞ்சன நீர்

செவ்வாய் நகையரும்பச், செங்கை தளிர் விளங்க
மைவாள் நெடுங்கண் மதர்த்துலவ கண்ட மங்கை,
அஞ்சனம் அழியக் கண்ணீர் சொரிய, முனிவனுக்கு
மாலையிட்டு மண் பார்த்த உத்தமியோ பத்மினி







வண்ணம் கருக, வளை உடைய, உள்ளம் குமுற, வாய் புலர
தளிர் மேனி நடுங்க, மைவிழியில் நீர் சேர, மனம் வெதும்ப,
“கோமாதா உலகு” என்ற பார்ப்பனியக் கொடுமை
ஏமாந்த மங்கை கௌதமனுக்கு வாழ்நாள் உடைமை

வாதம்

தந்தையே எதை மனதில் வைத்து முதலில் உலகைச் சுற்றி
வருபவனுக்கு என் மகள் என உரைத்தீர்கள், தங்கள் வினாவிற்கு
விடையல்ல பசு, இது உமக்கும் தெரியும், இங்குள்ளோருக்கும் தெரியும்,
பார்பனிய வாதத்திற்கு என் வாழ்வை பலியாக்குவது முறையல்ல

இருப்பதோ ஓர் உலகு-பசுவே உலகென்றால்
உலகில் எத்தனை உலகு, வரட்டுச் சாத்திரங்கள்
என் வாழ்வை அழிப்பதென்றால்
அவற்றை தீயிலிட்டு எரிப்பதே உகந்தது





ஓதுவது கிளிப்பிள்ளை வேதம் என்றால் ஒழுகுபவன் குருடன்,
ஞான பண்டிதர் நீங்கள், உம் நெஞ்சில் கைவைத்து,
நேரிய உள்ளத்தோடு நீதியைச் சொல்லுங்கள்
“உலகு” என நீங்கள் விளம்பியது உண்மையில் பசுதானா?

மண்ணாளும் மன்னரும், செல்வரும்
நமக்கு வழங்குவதோ பசு தானம்-தானப் பொருளே
உலகென்றால் அறிஞர் நாணுவார், ஞானியர்
நகைப்பார், வேண்டாம் இந்த விதண்டாவாதம்

வரட்டுச் சாத்திரங்களை நம்பி வனிதையில் காதலைப்
பறிக்கவேண்டாம், குருட்டுப் பக்தியால் உங்கள் குமாரியை
படுகுழியில் தள்ள வேண்டாம், கொதிக்கும் என் மனம் ஆற
கொண்ட உண்மை நிலைக்க, முடிவை மாற்றுங்கள்

ஒரு பசுவையே கெதமன் சுற்றி வந்தான்,
உலகைச் சுற்றும்போது-உலகில் உள்ள
எல்லாப் பசுக்களையும், இந்திரன் சற்றி வந்தார்
பசுதான் உலகென்றால் பரிசு இந்திரனுக்கே




பசுதான் நீங்கள் குறித்த உலகென்றால், பசுவைச் சுற்றிவர
கூன், குருடன், முடவன், செவிடன் ஏன் அண்ணகனால்
கூட முடியும், அது வீரத்தை, கூடவே விவேகத்தை காட்டும்
போட்டியியாயிருக்காது, கேலிக்கூத்தாய் மாறியிருக்கும்

உங்கள் மகள் வாழ்கை சோபிக்க வேண்டுமென்றால்,
தவசிரேஷ்டராயிருந்தால் முனி கௌதமன், இந்திரனோடு
போட்டியிட்டு உலகைச் சுற்றி வந்து வெற்றி பெறட்டும்
போட்டியில் நீதியிருக்கும், வெல்வதில் நியாயம் ஜொலிக்கும்

உயிர் நடுங்கி மெய் வருந்தி சேல் விழிகளில் நீர் சேர,
அஞ்சனம் கரைய, பெருமூச்சு நிலைக்க, கார்குழல் கலைய
இடை மெலிய, மெய் வெளிறி வண்ணமிழக்க அஞ்சி நடுங்கிய
கோதை, அநீதத் தீர்ப்பிற்கு பலியான அபலை



மண் பார்த்த முனி, மகளையும் பார்த்தார்
மனக்குமுறலை அறிந்தார், உள்ளம் கவர்
கள்வன் இந்திரன் என்றறிந்தவர், பார்வையை
திசைமாற்றி, கண்ணீரை மறைத்தார்



மணவாழ்வு

கட்டழகன் இந்திரனோ வீரபுருஷன் எண்ணும் போதெல்லாம்
அடிக்கரும்பைச் சுவைக்கும் கன்னி மனம், தாடி, மீசை,
கமண்டலம், வேள்வி. மந்திரம் ஓதிப் பிழைக்கும் முனிவனை
காணும்போதெல்லாம் நுனிக்கரும்பைச் சுவைக்கும் சாபம்

கன்னி மனம் அறியாது, மங்கை காதல் புரியாது,
உடைமையாய் ஆட்கொண்ட வரட்டு பார்ப்பனியத்
தத்துவம், கனிந்த மனம் கல்லாக, காதலர் தினம்
சாபமாக, பாலையாய் பாவை மனம் மாறிய தினம்

மனம் சிதைந்து உயிரும், மெய்யும் புண்ணாக,
முதலிரவில் நடந்த வன்புணர்வு, வனமோகினி
வனப்பிழந்த வாடிக்கிடக்க, கன்னி கழித்த சனி
அதிகாலையில் கங்கையில் நீராடி கடன் முடித்த முனி

பொன்மேனி தழுவிட தந்திரத்தால் பெற்ற உரிமம் திருமணம்,
பொய்யானது, உள்ளம் கலவாமல் உடல்கள் கலக்கும் உறவோ
வன்புணர்வு, மறுக்க, முனிக்கும் மனம் இடங்கொடுக்கவில்லை
மங்கை குரலுக்கும் செவிசாய்க மனிதனாய் யாருமில்லை



ரிஷ பத்தினி வாழ்வில் நாளும், சமித்தும்,
தர்ப்பையும், மலர்களும் சமையலும்
அதிதி உபசாரமும், அந்தி கழித்த இரவில்
காமவேள்வி, அகலிகையோ ஆகுதி



பூக்களும், சமித்தும், தர்ப்பையும் நாளும்
சேகரித்து ஓம குண்ட அக்கினி வளர உதவிடும் வாழ்வு
நெஞ்சமோ கொதித்து எரிமலையாய் குமுற,
ஆணாதிக்க சம்போகப் பொருளாய் தினம் சாவு

காதல் தீ மூட்டிட அறியாத மூடன், பேரழகை கவிபாடி
போற்றத் தெரியாத சூதன், மன்மத ராகம் புரியாத
அண்ணகன், ஓம குண்டத்தில் சொரியும் அவிர்ப்பாகமாய்,
பெண்மையில் தன்னை உழுது விதைக்கும் காமுகன்

இரு உடல்களின் சங்கமத்தில் இன்பமில்லை
இதயம் கலவாத உறவில் நாதமில்லை
காதலை அறியாத முனிவன், காமம் தணிக்க
கணிகையை நாடும் கயவன்போல் கணவன்



புண்ணான உள்ளம் கல்லாக, புணர்ச்சி இன்பம்
நெருப்பாக, கருகிய தேவி, ஏமாற்றி மணந்தவன் வாழ
மணம் வீசி மலராத அலர், வன்புணர்ச்சியின்
போதெல்லாம் ஈரவிழியோடு சருகாகும் மலர்

செவி குளிர, மனங்குளிர அழகைப் புகழாமல், போற்றாமல்
பொன்மேனி சிலிர்க்க காதல் மொழியாமல், பூ விழியழகை வியந்து
விழிகளால் தழுவாமல், மதி நுதலில் ஒரு முத்தம் வையாமல்
புள்ளிபோடாமல் போடும் கோலம், நாளும் அலங்கோலமானது

மதுமலர்க் கூந்தல் கோதாமல், கவ்விச் செவ்வாய்
அமுதம் சுவையாமல், வெண்சங்குக் கழுத்தில்
முகம் பதியாமல், சந்தனக் கலசங்களில் முத்தம்
சொரியாமல் வன்புணர்வான நிகழ்ச்சி, கசப்பானது



இடையழகை மின்னலோ, கொடியோ என வியந்து பாடாமல்,
மதர்த்த செவ்வாழைத் தொடைகளை புரிந்து போற்றாமல்,
பங்கய முகத்தை பார்த்து இரசிக்காமல், காமன் மகள்
அழகைத் தொழாமல் புணர்தல் அருவெறுப்பானது

அங்கயற்கண்ணியை உழுது விதைக்கும் காமக்காரனாய்
கௌதமன், உச்சம் தொடமுன், உழுத களைப்பாற,
எச்சிலாய் பெண்மை வாட ஒதுங்கும் அண்ணகனாய் ஆண்மை
மனம் வாட விழி சிவந்து கண்ணீரில் நீராட வெதும்பும் பெண்மை

மரகத வீணையில் சுருதி சேர்க்கத் தெரியாத முடன்
வாசிப்பில் மோகனத்தை அறியாத காமுகன்,
விந்து கழிக்கும் கழிப்பிடமாய் ஐந்துவிற்கு பொன்மேனி
குமுறிக் கொதிக்கும் மனமோ தூர்ந்த கேணி

கட்டையாய் கிடந்து மரத்துப்போன மங்கை வாழ்வு,
நாளும் சேவல் கூவ எழுந்து, கங்கையை நாடி,
காயத்திரி மந்திரம் ஓதி, கதிரவனை வழிபட்டு சடங்காய்த்
தொடரும் நிகழ்வோ முனியின் மாறாத வாழ்வு



காமவேதம்



நங்கை மனம் துன்பக் கங்கையாய் நாறிட
இந்திரனைக் கண்டு துளிர்த்த காதல், இலை மறை
காயாய் இதயத்தில் நிலைத்திட, சேவல் கூவிட,
விழித்த முனி கங்கையை நாடிய இராப்பொழுது

கொக்கரக்கோ உரத்துக் கூவிய சேவல்-விழித்திடு
கெதமனை அழைக்க, எழுந்தவன் கங்கை நோக்கி நடக்க,
காமச் சேவல் கூவிட, கௌதமன் வடிவெடுத்து
மங்கையை நெருங்கிய மன்மதனாய் இந்திரன்

தூக்க மயக்கத்தில் தொட்டுத் தழுவியவன் உருவத்தில் கணவன்,
தொடுகையில், தழுவலில், காதல் வீணைக்கு சுருதி சேர்க்கும்
மன்மதக் கலைஞன், இதழமுதம் பருகிட நெஞ்சம் பகிர்ந்தது
உள்ளம் கவர்ந்த கள்வன் இவனோ இந்திரன்

உணர்வுகள் சிலிர்த்தெழு, உள்ளம் உருகி மெழுகாய் கரைய,
ஒருபோதும் அறியாத இன்பம் உயிர் மெய்யை ஊடுருவ,
தன்னழகில் பெருமை கொண்டு தன்னையிழந்த பெண்மை,
கல்லாய் மனம் மாறிட சாபத்திற்கு ஆளான சிறுமை



ஆடை மூடிய அழகை இரசித்தவன், மெல்ல அணைத்தான்,
தென்றலாய்த் தழுவி, தெள்ளமுதமாய் இதழமுதம் பருகி
விடாய்த்த மங்கை மனம் ஆறிட, காதலாய் கவிதை சொல்லி
காமவேதம் படித்திட களித்த மங்கை, காமினிக்குத் தங்கை

மேனியிலே நறுமணம், அணைப்பிலே ஆண்மையின்
கம்பீரம், நெஞ்சம் கவர் கள்வன் இந்திரனே என
என உள்ளம் உரைத்தும் மயங்கிய மாது. காப்பவிழ்ந்த
மலரில் தேனருந்திக் கொண்டாடிய காமன் விருந்து

விழிபார்த்து கயல் என வியந்து, மொழி கேட்டு
குயில் எனப் புகழ்ந்து, செவ்வாய் முத்தம்
அமுதென மகிழ்ந்து, பொன்மேனி நாணிச் சிவக்க,
பூவையிடம் பூந்தேனருந்தி மயங்கிய பூவும், வண்டும்

கண்ணோடு கண் கலக்க, காதல் பிறக்க, மெய் வருடி
கவிபாடி, உள்ளம் மகிழ, ஆடை நெகிழ உறவாடி
கள்ளமின்றிக் கலந்த காதற் காமத்திற்கு சடங்கு,
சம்பிரதாயம், இரும்பானாலும் நூலாம்படையானது

கனிந்த மனதில் காதலின் பாசுரங்கள்
காமவேதத்தை இசைத்த மனதில் நாதஸ்வரங்கள்
தன்னைக் கொடுத்த மனதில் அழகி என்ற பாவம்
ஆட்கொண்ட மனதில் அழகோ பேரின்பம் என்ற தாகம்

சப்தஸ்வரங்களை மீட்டி, இதயங்கள் சங்கமிக்க
பிறந்த மோகன ராகம், அழகியின் உள்ளத்தில்
காதலின் அபிநயம், சுவைக்கச், சுவைக்க சுவையேறும்
கனியோ அகலிகா ஆண் மனதில் வற்றாத விரகதாபம்

கரையுடைக்கும் காமவெள்ளம், கால நேரம்
பார்ப்பதில்லை, என் நினைவில் எந்நாளும் நீ
உன் மனதில் நான், கூடிக்களித்திட கோடி
இன்பமடி, பெண்ணே நீ தரும் இன்பம் பேரின்பமடி

கௌதமன் கைபடக் கல்லாகும் உடல், இந்திரன்
கவிதை கேட்டு காப்பவிழ்ந்த தாமரையாய் மலர
மதுகாரி தேனருந்தி விருந்தாட, மகிழ்ந்து கூத்தாட
மார்பிலே மகரந்தமாய் ஒட்டிய மங்கை மணம் பரிமளம்

மங்கையரும் மயங்கிடும் என் அழகோ பேரழகு, என்
அழகில் மயங்கிய மோகனச் சந்திரனோ இந்திரன்
கௌதமன் வடிவில் வந்தாலும்-கூடிக் கலந்து கோடி இன்பம்
தந்தவன் இந்திரன் எண்ணிக் களித்த மனம்



இந்திரனை மயக்கிய பேரழகு, மோகினியை கண்டபின்
பிரம்மன் படைத்த பேரழகு, காமவேதமோ
உயிர் மெய்யோடு கலந்த உறவு, கலவியின்பமே
பேரின்பம் மெய்யெனக் கண்ட இனிய இராப்பொழுது

அஞ்சுகத்தின் நெஞ்சினிலே ஆனந்தம்
காதற்காமம் அருஞ்சுகத்தை சுகித்த பேரின்பம்
கௌதமன் உருவத்தில் காமசுகம் தந்தவனோ
இந்திரன், காதற் கள்வனோ மனம் ஓதும் மந்திரம்

உள்ளத்தால் வழுவாமல் உடல் உணர்வால்
வழுவிய மங்கை, கள்ளத்தால் கற்பு நெறி தவறாத
நங்கை, மடை திறந்த காதல் வெள்ளத்தில்
காமன் கணைபட்டு புண்பட்டு தனையிழந்த கோதை



சேவல் கூவியும் விடியாத பொழுதோ நள்ளிரவு
பெண் மனமோ காதலாகிக் கனிந்த இரவு
வந்தவனுக்கு விருந்தாய் தன்னை உவந்தளித்து
காமன் பண்டிகையை காதலாகிக் கொண்டாடிய உறவு

சாபம்

விடியாத பொழுதில் கூவிய சேவல்
விழிக்காத மனதிற்கு வரட்டு சாஸ்திரமோ காவல்,
காமவேதம் ஓதும் காதலர் கோலம் அலங்கோலம்
கண்ட முனியின் விழிகளிலோ எரிதணலின் அகோரம்

பிறன்மனை நாடிய தேவந்திரன் மேனியெங்கும், பிறர் கண்டு
நகைக்கப் யோனிப் பூக்கள் பூத்திடச் சபித்த முனிவன்
அறிந்தும் அறியாதவளாய் தன்னை அளித்து இன்பம்
சுகிர்த்தவளை கல்லாய்ச் சபித்த கௌதமன்

புனர்புழை அலங்காரப் புருஷனாய் இந்திரன் மாறிட
கௌதமன் இட்ட சாபம், உள்ளம் கலங்கியவன்
மண்டியிட்டு மன்னிப்பை வேண்டிட, யோனிகள் எல்லம்
கண்களாய் மாறிட மாற்றிய சாபம் பரிதாபம்



தீர்க்க சுமங்கலி பவ மணமொடிந்து நின்றவளுக்கு
மாலையிட்டு வக்கிர புத்தியோடு வாழ்த்திய முனி
வாழ்த்தும் பொய்யாக, வசையோ நிலையாக
மனம் கல்லாக சாபத்தால் வாட்டிய முனியோ சனி

இந்திரனோடு என் வாழ்வு-மந்திரமின்றி,
மணமாலை இன்றி மனதால் ஒன்றானது
கௌதமன் சாபம் வரமாகிட-மணவிலக்கு கிட்டிட,
மங்கை மனம் சந்தோஷத்தால் பொங்கியது

சுயம்வரம் பெண்ணுரிமை, எம் பிறப்புரிமை, மனதால்
ஒன்றித்து மாலையிட்டவனோடு வாழ்தலே நல்லறம்,
மனதிற்குப் பிடித்தவனுக்கு விசுவாசமயாிருத்தல் கற்பு,
அதுவே மாலையிட்ட மங்கையருக்குப் பொற்பு

இரு மணம் காதலாகிப் புரியும் புணர்ச்சி புனிதம்,
ஆணவமழிய நான் மறைய, எல்லாம் நீயென்ற புனிதம்
காதலருக்கு மட்டும் கிட்டும் பரமபதம், சூதாடி,
வாதாடி வென்ற பெண்ணோடு கிட்டாத அருஞ்சுகம்

கௌதமனோடு கிட்டாத பதம்-இந்திரனால் கிட்டிய
அருஞ்சுகம், சாபம் பெற்ற மனதில் இன்பம்-சாபமே
வேண்டிப் பெற்ற வரமான சுதந்திரம், மனதிலே பெருமிதம்
சாஸ்திரம் தந்த மணவாழ்வு வேண்டாத சூத்திரம்

பெண்ணியப் புரட்சி



உணர்விழந்து கல்மனமாகி நடைப்பிணமாய்
அகலிகாவின் வாழ்வு, கல்லாய் கிடந்தவள்
மனதை கனிவாய் ஸ்ரீராமன் தொட்டிட-பூவாய்
மலர்ந்த பூவை பெண்மைக்கோ மேன்மை

ஒருவனுக்கு ஒருத்தி என்றவன் காலடிபட்டு
கல்மனமும் கனிந்தது, புரட்சி மனம் கௌதமனை
மீண்டும் ஏற்க மறுத்தது, மங்கையர் மனம் மென்மை,
விவாகரத்துச் செய்த பெண்மையோ மேன்மை

பிரம்மன், இந்திரன், சந்திரன், யயாதி என
பெண்போகத்தை நாடிய பிதாமகன்கள்
பெண்ணின் மனதை தொடாத உடலைத் தொட்டு
சம்போகம் அனுபவித்த பேடிகள்

அண்ணலும் நோக்க, அவளும் நோக்க. கண் பார்த்து
நெஞ்செழுதிய காதலோ காவியம், கானகத்தே இராவணன்
சிறைப்பட்டு மீட்டவளை, நெய் வார்த்த தீயில் நீராடி வா பணித்த
ஸ்ரீராமன் வார்தைகளால் சீதையோ வண்ணம் குலைந்த ஓவியம்

வண்ணான் மொழிகேட்டு கர்ப்பிணித் தாயை
வனமேகப் பணித்த சாபம், லவ, குசனை ஈன்றபின்
ஏற்க வந்த ஸ்ரீராமனை வேண்டாம் என ஒதுக்கிய
அன்னை மனமோ கல்லான பாவம்

சுயம்வரத்தை மறுத்து கல்லானாலும் கணவன்
புல்லானாலும் புருஷன், பெண்ணை சம்போகப் பொருளாக்கி
பெண் அடிமைத் தனத்தை நிலைநிறுத்திய மனுஸ்மிருதி
பெண் குலத்திற்கே பொருந்தாத நியதி

அகலிகாவும், சீதையும் மனமொடிந்து
மாலையிட்ட மணாளனை நிராகரித்த புரட்சி, நங்கை
மனதால் வரித்த இந்திரனோ கணவன், மங்கையை
வஞ்சித்துப் பறித்த கௌதமனோ காமுகன்



நெய் வார்த்த தீயில் நீராடிய சீதையால்
இராவணன் கற்பு நிருபணமானது, காதலால் அன்றி
கணவன் உரிமத்தால் கன்னியைத் தொட்டவனும்
காமுகன், மனச்சாட்சி கௌதமனை உறுத்தியது

விதி மாற்றி, உலகிற்கு வகுத்த பொருள் மாற்றி
வஞ்சியை வஞ்சித்த பார்பனிய உலகு
ஆணாதிக்கம் மாறாத, ஒழியாத நிகழ்வு, அகலிகா.
சீதாவால் எழுந்த பெண்ணியப் பரட்சியோ புது வரவு

கல்லான அகலிகா மனம் ஸ்ரீராமன் கால்பட்டு
கனிந்த கனியாக, ஸ்ரீராமன் சுடு சொல் கேட்டு
கனிந்த சீதை மனம் கல்லானது, ராஜா ராமனை
வேண்டாம் என ஒதுக்கி விவாகத்தை ரத்தாக்கியது

மாலையிட்ட மணவாளனால் துக்கித்த அகலிகா,
சீதை, நளாயினி மாதரசிகள், மங்கை
மனதைப் புண்ணாக்கிய கௌதமன், ராஜா ராமன்,
மௌத்தகல்ய ரிஷியாய் புருஷர்கள்?

சேவல் கூவி பொழுது புலர்வதில்லை. அறியாத முனிவனுக்கு
சாபமோ வரம்-வண்ணன் வார்த்தைகளில் நீதியில்லை,
அறிந்தும் சீதையை வனமேகப் பணித்த ராஜாராமனுக்கு ,
குடையும், கோலும், அரியணையும் சாபமான நிலை



கனிந்த கல்மனம் கௌதமனை கணவனாய்
மீணடும் ஏற்க மறுத்தது, கனிந்த தாய் மனம்
கல்லாகி, மணாளன் ஸ்ரீராமனைத் துறந்தது
ஆணாதிக்கம் ஒழிக பெண்மையின் கோஷமானது

கன்னியின் காதல் மனம் அறியாத கௌதமனுக்கோ
கல்மனம், புலரும் பொழுதை அறியக் கூவும்
சேவலை நம்பிய அஞ்ஞானம், அழகை துணையாய்
பெற பசுவை சுற்றி வந்த பார்பனிய விஞ்ஞானம்

ஏமாற்றி என் மனதை மாற்றிடப் பூண்ட சல்லாபம்
வெறும் வேஷம், மண வாழ்வு கல்லான பாவம்,
இனியும் உம்மோடு வாழ்வதோ எரிநரகம், மணந்த
அன்றே மணமிழந்து சருகாய் மாறிய என் மனம்



என்மீது படிந்தது களங்கமா? கணவனுக்கு விசுவாசமாயிருத்தல்தான்
கற்பின் இலக்கணமா? கன்னியைக் கைப்பிடிக்க கையாண்ட உத்தி
வஞ்சகம், கன்னி மனம் சிதைய, கூடும் வன்புணர்வோ விபச்சாரம்
கௌதமரே உம் சொல், செயல், சிந்தை எல்லாம் அபச்சாரம்

பெண்ணுக்கும் மனமுண்டு, பெண்மையை பூஜிக்க அறமுண்டு,
காதல் இல்லாத வாழ்வில் கல்லும் முனியும் ஒன்றே,
கடையிலிருந்தால் சிற்பம், கோயிலிருந்தால் தெய்வம்.
பக்தி வந்தால் புத்தி பறிபோகும் சத்தியமே

இரு மனங்கள் புரிதலோடு இணைவதே திருமணம்
என் மனம் கல்லாக, ஏமாற்றி. வஞ்சித்து, என்னைப்
புணரப் புரிந்ததோ செல்லாத் திருமணம், சருகான மலர்
மீண்டும் மலராது, மணமில்லா வாழ்வோ பாலைவனம்

நெஞ்சம் வரித்தவன் இதயத்தில் இருக்க-
வார்த்தை ஜாலத்தால் ஜெயித்தவனோடு
மஞ்சத்தை பகிர்தல் விபச்சாரம், வேதியர்
அறியாத பெண்மையின் காதல் மந்திரம்

உள்ளத்தில் ஒருவனை வைத்து-உடலால்
ஒருவனோடு வாழும் விபச்சார வாழ்வு எனக்கு
எரிநரகானது, மணமுறிவிற்கு இந்திரனே வழி
புலனானது, ஆடிய நாடகம் முனியே நீர் அறியாதது



காதல் வாழும் இதயத்தில் காமமில்லை
வஞ்சித்த முனியோடு மஞ்சம் பகிரும் வாழ்வு
அஞ்சுகத்தின் நெஞ்சுக்கு எரிநரகானது,
வஞ்சிக்கு விடுதலையின் வழி புலனானது



மங்கையின் மனவேதனை இந்திரன்
மனதைத் தொட–**இரவில் ஆடிய நாடகம்**
இருவர் மட்டும் அறிந்த இரகசியம்-முனிவன்
சாபமே வஞ்சிக்கு விடுதலை, நிதரிசனமானது

வன்புணர்வான வாழ்வில் ஒட்டாத மனம் மணவேலி கடந்து
விடுபடத் துடித்தது, விடுதலைக்கு காதலன், காதலியாய்
ஆடும் நாடகம் தந்திரமானது, காம வேதமே, மங்கையின
விடுதலைக்கு ஓதும் மந்திரமும், வேள்வியுமானது

ஆடியது நாடகம் எனப் புரியாமல்- அழகிய உறவைச் சபித்து
சாபமிட்ட முனிவன், கன்னி மனம் கல்லாக, இந்திரன் வாழ்வு
வெட்கக்கேடாக, கிடைத்த விடுதலை சுந்தரமானது
யாத்த காமவேள்ளி புனிதமானது, நங்கைக்கு சுதந்திரமானது



பேரழகும், அவலட்சணமும் ஒன்றாக
பேராசையால் கௌதமன் புரிந்தது துரோகமே,
பசுவைச் சுற்றி வந்து, பேரழகியைப் பரிசாய் கேட்டு
காதலரைப் பிரித்தது அசுர யாகமே

என் வசந்தம் மீண்டது, வனம்போன தாய் சீதை
கதை கேட்டு மனம் வாடியது-ஆண்கள் எல்லாம் ஒரே விதம்,
பெண்மையை ஆளும் ரகம், புலம்பிய மனம் மீண்டும்
கல்லானது, புத்த பெருமானுக்காய் காத்திருக்குது

பெண்மைக்கு குரல் கொடுக்க யாருமில்லை, கற்பென்பதோ
பெண்களுக்கு பொன் விலங்கு, இந்திரன் கைபட என் மனம்
மலர்ந்தது உண்மை, மீண்டும் கல்லான மனம் கனியாது,
முனியே உன் சாபம் என் மனதை தீண்டாது

காமனை வெல்லக் காதலில்லாத வாழ்வோ சாபம்,
நான் நெகிழ்ந்திட என் உணர்வுகளோடு
விளையாடிய இந்திரன் புரிந்ததோ சல்லாபம்
கல் மனம் நெகிழ்ந்திட காதலே வரம்



கௌதமன் கல்லாகிட இட்ட சாபம், மணநாள்
அன்றே கல்லான மனதிற்கு பலிக்காத பாவம்,
இனியொரு சாபம் எதற்கு முனியே,
இனியொரு மணநாள் எதற்கு விதியே?

முள்ளில் மலர்ந்த வண்ண ரோஜாக்கள்
கல்லுக்கு பூசையானால், கல்லும் தெய்வம்
புல்லுக்கு பூவையரும் மாலையிடும்போது, புல்லும்
புருஷன், என்னே நியாயம்? விதாண்டாவாதம்

அரம்பை மேனகையைத் தாயாக்கி கானகத்தே கைவிட்ட
காமுகன் விசுவாமித்திரனும் முனிவன், இளவரசி
நளாயினியை ஏமாற்றி மணம் புரிந்து சோகத்திற்கு ஆளாக்கி
வேசியிடம் இன்புற்ற காமுகன் மௌத்த கல்யரிஷியும் முனிவன்

முக்தல முனிவன் முத்துக் குளித்துப் பெற்றெடுத்த
கொற்கை முத்தாய் அகலிகா, மன்னன் சூடும் மாமுத்தை
முனிவன் சூட சூதான மணம், மலரான நங்கை
மனம் கல்லாய் மாறிட, நடைப்பிணமாய் மங்கை



கன்னியின் காதல் மனதை புரியாமல், காதலின் சுகத்தை
அறியாமல், சுயம்வரத்தை மதியாமல், பசுவே உலகெனச்
சுற்றி வந்த முனிவனுக்கு முடித்து வைத்த திருமணம்
கன்னி மனதை நொருக்கி வல்லுறவுக்க வழிவகுத்த ஆணிணம்

நெஞ்சம் குமறிட, வெள்ளமென கண்ணீர் பெருகிட
சுவாசம் பெருமூச்சாய் மாறிட, கண்ட வண்ணக் கனவுகள்
கணப்பொழுதில் சிதைந்திட, மாலையிட்ட முனியோடு
ஆயுட்கால சிறைவாசமாய் மாறிய மணவாழ்வும் வாழ்வோ?

புரிந்துணர்வின்றி, மனம் விரும்பாதவனோடு
வாழும் வாழ்வு சிறைவாசம், கூடும் உறவு
விபச்சாரம், கன்னியரை வல்லாங்கு புரிய, ஆணிற்கு
வழங்கிடும் உரிமம் திருமணமோ? வெட்கம்!



பொருந்தாத மனங்கள் இணைவது திருமணமல்ல,
ஆணுக்குப் பெண் அடிமையோ, உடைமையோ அல்ல
சம்போகப் பொருளுமல்ல, காதல் இல்லாத மணம்
பாலைவனம், புரிதல் இல்லாத உறவு சிறைவாசம்

கல்லுக்கு மாலையிட்டு கடவுள் என வணங்கவும்,
பிணத்திற்கு மாலையிட்டு அமரர் எனப் போற்றவும்,
நடைப்பிணத்திற்கு மாலையிட்டு புருஷன் என ஏற்கவும்
பெண் ஒன்றும் பூவல்ல, அடிமைகளும், பேதைகள் அல்ல

அகலிகா மனம் கல்லல்ல, கல்லாய்ச் கபிக்க
அண்ணக முனிவனுக்கும் சக்தியில்லை, காதலுக்காய்
ஓங்கி ஒலித்த குரல், சீதையின் கதை கேட்டு
சிலையான பெண்மையிலோ ஆற்றொண்ணாத் துயர்

சபிக்கத் தெரிந்த முனிகளுக்கு-என்றுமுள்ள தர்மம் தெரியவில்லை,
அன்பே தெய்வம், உண்மையே பாதை அறிந்தவளுக்கு
வரட்டு வேதம், சாஸ்திரம் வார்த்தைக் குப்பை என்றானது?
சாதியம் வாழும் உலகில் காதலோ சாகும் நிலை நிஜமானது

அவளுக்கென்று ஓர் மனம் இருப்பது தவறா?
அகலிகாவின் வாழ்வு புதுமையும், புரட்சியுமானது
ஆணியத்திற்கு சவாலானது

துர்க்க ஆயுஸ்மான் பவ (Durkka Āyusmān Bhava):
நீண்ட ஆயுளோடு வாழ்க என முனிகள் வாழ்த்த
தீரண் ஞானேந வசந்துா- நீண்ட நிலைத்த மற்றும் ஆழமான
அறிவோடு வாழுங்கள் என பௌத்த்த பிக்குகள் வாழ்த்த
வேதங்களை நிராகரித்த புத்த பெருமானோ மெய் ஞானி

பக்தி வந்தால் புத்தி பறிபோகும் உண்மை
ஆயுளிருந்தும் அறிவில்லாதவன் வாழ்வு நடைப் பிணம்,
மதங்களைத் தொழுது வாழும் மக்கள் மந்தைகளே-
மதம் அபினியும் போதை வஸ்துமே

ஞானமே வாழுங்கலையின் நாதம்
உண்மைக் காதலே திருமண வாழ்வின் வேதம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-30-07-2024

- **ṭīraññāṇa** (தீரண்ஞான) - நீண்ட, நிலைத்த, மற்றும் ஆழமான அறிவு.
- **vasantū** (வசந்தூ) - வாழுங்கள்.இந்தப் பாசுரம் "தீர்க்கமான அறிவோடு வாழுங்கள்" என்றவாறு, நீண்டகாலம் நிலைத்த அறிவுடனும், அமைதியுடனும் வாழ்வதற்கான ஆசீர்வாதமாகப் பயன்படுத்தப்படுகிறது ṭīraññāṇena: With deep wisdom (ṭīra = deep, profound; ñāṇa = wisdom)vasantū: May they flourish, prosper, or be well-Meaning of the Blessing

The Buddhist monk is blessing the people with a wish for their prosperity and well-being through deep wisdom. It's a beautiful and profound benediction, encapsulating the core of Buddhist teachings: that true happiness and fulfillment come from wisdom and understanding.